உ

# வருஷப்பெயர் விளக்கம்.


யாழ்ப்பாணம், கொக்குவில்

"சோதிடபரிபாலினி" ஆசிரியர்

இ. சி. இரகுநாதையர்

எழுதியது.


---

இடைக்காடர் அருளிச்செய்த

## அறுபதுவருஷ பலனுடனும்,

இடைக்காடர் வரலாற்றுடனும்

---


கொக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

யுவஸு பங்குனிமீ.

1936.

[விலை ரூ 1.00

உ

சிவமயம்.

# வருஷப்பெயர் விளக்கம்.

[யுவ௵ பங்குனி௴ ௧௫உ சோதிடபரிபாலினியிலிருந்து எடுக்கப்பட்டது]

---

உலகத்திலே பலவேறு வகைப்பட்ட தேசத்தவராலும் சமயத்தவராலும் வழங்கப்படும் வருஷக்கணக்குகளுள் இந்தியருடைய வருஷக்கணக்கே மிகச் சிறந்ததென்பது பின்வரும் நியாயங்களினால் நன்கு புலப்படும். சோதிடசாஸ்திரங்களுள் முதன்மைபெற்ற சூரியசித்தாந்தத்தில்:

ப்ராஹ்மம் திவ்யம் ததா பித்ர்யம் ப்ராஜாபத்யம் குரோஸ்ததா ।
ஸௌரம் ச ஸாவனம் சாந்த்ரம் ஆர்க்ஷம் மானானி வை நவ ॥

என்று விளக்கியபடி, பிரமமானம், தேவமானம், பிதிருமானம், பிராஜாபத்தியமானம், (குரு) பார்ஹஸ்பத்தியமானம், சௌரமானம், சாவனமானம், சாந்திரமானம், நாக்ஷத்திரமானம் என ஒன்பதுவகை மானங்களுள.

இவற்றுள், குருவினது மத்தியராசி சஞ்சாரத்தைக் கொண்டு கணக்கிடப்படும் பார்ஹஸ்பத்தியமானம் விந்தமலைக்கு வடக்கே (அதாவது பம்பாய் முதலிய நாடுகளில்) வழங்கப்பட்டுவருகின்றது. விந்தமலைக்குத் தெற்கில் சூரியனுடைய சஞ்சாரத்தைக் கொண்டு கணக்கிடப்படும் சௌரமானம் வழங்கப்படுகின்றது. இவ்விரு பகுதிகளிலும் சூரியசந்திரர்களுடைய சஞ்சாரத்தைக் கொண்டு கணக்கிடப்படும் சாந்திரமானம் வழங்கப்படுகின்றது. தென்னிந்தியாவில், சாந்திரமானம் தெலுங்கர்களாலும், சௌரமானம் தமிழர்களாலும் கைக்கொள்ளப்படுகின்றன.

சௌரம், சாந்திரம், பார்ஹஸ்பத்தியம் இம்மூன்றும் தவிர மற்றைய மானங்கள் பெரும்பாலும் உபயோகிக்கப்படுவதில்லை.

சௌர பார்ஹஸ்பத்திய மானங்களுக்கு வருஷப்பெயர்களில் பேதமுண்டு. இத்தேசத்தில் சௌரமானப்படி யுவ வருஷம் நிகழும்போது, விந்தமலைக்கு வடக்கிலுள்ளோர் பார்ஹஸ்பத்தியமானப்படி சர்வசித்துவருஷம் நிகழ்வதாகக் கொள்கின்றனர். ஆகவே, ஆங்கு கொள்ளப்படும் வருஷம் இத்தேசத்தில் கொள்ளப்படும் வருஷத்திலும் பார்க்க 12 வருஷம் கூடியதாகும்.

இந்தியரல்லாத மற்றைத் தேசத்தவர்களும் மற்றும் மார்க்கத்தினரும் வருஷங்களை இவ்வாறு பெயரிட்டழைப்பதில்லை. அவர்களுடைய வருஷக்கணக்கின்படி தற்போது கிறிஸ்து பிறந்த ஆ. 1936 என்றும், முஹம்மது (ஸல்) மக்காவிலிருந்து மதினாவுக்குச் சென்ற ஆ. 1355 என்றும், மேலும் இவ்வாறே ஒவ்வோர் சம்பவத்திலிருந்து இத்தனையாவது ஆண்டு என்றும் வழங்குகின்றார்கள். இந்தியராகிய நம்மனோரால் வழங்கப்பட்டுவரும் வருஷக்கணக்கோ சரித்திரகாலத்துக்கு முற்பட்டதாக விருக்கின்றது; உலகம் சிருஷ்டிக்கப்பட்டபோதே கடவுளால் நியமிக்கப்பட்டது. இதற்குப் பிரமாணம்: பிருஹதாரணிய உபநிஷதம், 5-ம் அத்தியாயம், 8-ம் பிராம்மணம், 9-ம் வாக்கியத்தில், "காலசொருபியாகிய பகவான் சராசரப் பிரபஞ்சங்களுடன் ஜகத்தைச் சிருஷ்டித்து, வருஷ அயன இருது மாத பக்ஷாதிகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்" என்றிருக்கின்றது.

வருஷங்களின் பெயர் 60-ம் வந்த காரணத்தைப்பற்றிப் புராணங்கள் கூறுவதாவது:—

காவற்கடவுளாகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தியிடம் ஒருசமயம் நாரதமஹரிஷி அணுகி, "ஹே பக்தவத்ஸல! ஜகமெல்லாம் தேவரீருடைய மாயையே என்பது எனக்குத் தெரியும். ஆனால் அப்படிப்பட்ட மாயையினை யான் அறியும்படி கிருபைபாலிக்க வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். பகவான் அதனைக் கேட்டுப் புன்னகைபுரிந்து, "பிரமேந்திராதி தேவர்களும் அறிதற்கரிய அம்மாயையை நீ தெரிந்துகொள்ள விரும்பின் இத்தடாகத்தில் மூழ்கிவா" என்று பணித்தார். அங்ஙனம் நாரதமஹரிஷி மூழ்கிய அத்தருணமே பகவத்விலாசத்தினால் ஓர் இளம்பெண் வடிவாக எழுந்து, பூர்வஞானத்தை மறந்து, அங்குள்ள காட்டில் வசித்திருந்தனர். அங்ஙனமிருக்குநாளில் அக்காட்டின் அதிபதியாகிய ஓர் வேடன் கண்டு மோகித்து அப்பெண்ணை விவாகஞ்செய்துகொண்டான். இவ்வாறு இருவரும் கூடிச் சுகித்து அறுபது புத்திரர்களைப் பெற்றனர். பெண்வடிவான மஹரிஷி அப்புத்திரர்களுடன் சம்சார சாகரத்தில் மூழ்கித் துன்புற்றிருப்பதை யறிந்த பரந்தாமன் அந்த அறுபது புத்திரர்களையும் ஒரேதடவையில் இறந்துபோகும்படி செய்தனர். அப்புத்திரர்களின் பிரிவைக் குறித்து அப்பெண் துக்கப்பட்டுக்கொண்டு அலைந்துதிரிந்து, ஆகாரமின்றிப் பசிதாங்கமுடியாது ஓர் மாமரத்தில் தனக்கு எட்டும்படி பழுத்திருந்த ஓர் பழத்தைப் பறித்துக்கொள்ளப் போகும்போது அப்பழம் எட்டாமற்போய்க்கொண்டே இருந்தது. அப்போது ஸ்ரீமந் நாராயணமூர்த்தியானவர் ஓர் கிழப் பிராமணவுருவத்துடன் தோன்றி, "அம்மா! இப்பழம் உனக்கு இப்போது எட்டாது. இங்கேயுள்ள குளத்தில் ஸ்நானஞ்செய்து வந்தால் கிடைக்கும். ஆனால் ஸ்நானஞ்செய்யும்போது உன் இடதுகையை மட்டும் நனையாமல் மேலே தூக்கிக்கொண்டிருக்கவேண்டும்" என்று கூறி மறைந்தருளினார். அப் பெண் அவ்வாறே செய்தவுடன், அவ்வடிவுபெற்றிருந்த நாரதமஹரிஷி முன்போல முனிவடிவமானார். அப்போது அவர் தனது இடதுகையிற் பெண்கள் அணிந்துகொள்ளும் கைவளையல் மோதிரம் முதலியன இருக்கக் கண்டு, வருத்தப்பட்டுப் பயந்தவராய்க் கடவுளைப் பணிந்து நிற்ப, பகவான், "ஹே! நாரத! இப்போதாவது என் மாயையைக் கண்டுகொண்டனையா? பார்! இக்காட்டிலுள்ள வேடனுக்கும் உனக்கும் பிறந்த அறுபது புத்திரர்களும் இறந்திருக்கின்றார்கள். ஞானதிருஷ்டியால் காண்மின்!" என்றருள, நாரதரும் அவ்வாறே பார்த்து வெட்கமடைந்து பகவானைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, தனது கர்ப்பத்தில் பிறந்த அறுபது புத்திரர்களும் துர்க்கதியடையாமல் நற்கதியடையுமாறு அனுக்கிரகிக்கவேண்டும் என்று பிரார்த்தித்ததற்கிணங்க, பகவான் "அகிலதத்துவவிசாரஞான ஹே! நாரத! நீ வருத்தப்படாதே. உன் புத்திரர்களுக்குப் பிரபவாதியாகப் பெயர்களிட்டிருக்கிறேன். உன் புத்திரர்களில் ஒவ்வொருவருடைய பெயரைப் பூலோகத்தில் எந்நாளும் வழங்கும்படி செய்துளேன்" என்று அனுக்கிரகித்தார். அப்பெயர்களே பிரபவாதிஅக்ஷயாந்தமான அறுபது வருஷப்பெயர்களாகும்.



சிலர் ஸ்ரீகிருஷ்ணபகவானே பெண்ணுருவடைந்த நாரதருடன் கூடி அறுபது பிள்ளைகளைப் பெற்றதாகச் சொல்வர். அது பொருந்தாது. அங்ஙனமாயின், கிருஷ்ணாவதாரத்தின் பின்னரே உலகத்தில் வருஷப்பெயர்கள் வழங்கியிருத்தல்வேண்டும். ஆனால், அப்படியின்றி அநேக யுகங்களுக்கு முன்னரே வருடப் பெயர்கள் வழங்கப்பட்டதாக நூல்களிற் காணப்படுதலின் முந்திய சரித்திரமே பொருத்தமுடைத்தாகும்.

சம்வற்சர நிர்ணயத்தில்:

ஷஷ்டிஸம்வத்ஸராஹ்யேதே க்ருஷ்ணேனஜனிதா: புரா।
[illegible]॥

என்றுரைத்தபடியும், "யதா நாமம் ததா குணம்" எனவும் கூறியபடி, இவ்வருஷங்களின் பெயர்க்குத் தக்கவாறே அந்தந்த வருஷங்களில் உலகத்தில் துர்ப்பிக்ஷ சுபிக்ஷங்களுண்டாகுமென்று நாரத, வசிஷ்ட, கர்க்க, பிருஹத் சம்மிதைகளில் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வருஷ பலனைத் தமிழிற் பாடிய இடைக்காடரைக் குறித்து ஓர் கதை சொல்லப்படுகின்றது முன்னொரு காலத்தில் உலகத்திலே பன்னிரண்டுவருடம் மழையில்லாது பஞ்சமுண்டாகப்போவதை இடைக்காடர் என்பவர் முன்னரே யுணர்ந்து, வரகு என்னும் தானியத்தை மண்ணுடன் கலந்து ஒரு கோட்டை கட்டிக்கொண்டார். அவர் கருதியவாறே சிறிது நாட்கெல்லாம் பெரும் பஞ்சமுண்டாய், புல்பூண்டுகள் தீய்ந்து, உணவுப்பொருட்கள் கிடைக்காமல் உலகம் பெரும் துன்பப்பட்டிருந்தது. இடைக்காடரோ தமதிடத்திலுள்ள ஆடுகள் தினவுக்காக அக் கோட்டைச் சுவர்களில் உரோஞ்சிக்கொள்வதனால் உதிர்ந்த வரகரிசியைக் கஞ்சியாக்கி உண்டு வாழ்ந்தனர். இதனையுணர்ந்த நவக்கிரகங்கள் ஒருநாள் அதிதிகள்வடிவாக அவரிடம் செல்ல, அவரும் அனைவரையு மன்புடனுபசரித்து, அன்னம்படைத்து, ஒவ்வொரு அதிதிக்கும் கயிற்றால்செய்த ஒவ்வோர்கட்டிலுமுதவ, அவர்கள் தாம் வானவீதியில் இருக்கின்ற நிலைப்படி அக் கட்டில்களில் போய் நித்திரை கொண்டனர். அதையுணர்ந்த இடைக்காடர் அவர்களை நவக்கிரகங்களென்பதையுணர்ந்து அவர்கள் மெய்நித்திரை கொள்ளும்படி கடவுளைப் பிரார்த்திக்க, அவர்களும் அவ்வாறே மெய்நித்திரை செய்தனர். உடனே இடைக்காடர் அக்கட்டில்களை எந்த முறையில் மாறிவைத்தால் நல்ல மழை பெய்யுமோ அந்த நிலைமையில் ஒழுங்காக அமைத்தனர்.

வெள்ளியு முன்செல்ல வெங்கதிரோன் பின்செல்லத்
தள்ளியேயங் காரகனுந் தாழ்ந்துசெல—உள்ளபடி
பள்ளம் பயிர்செய்ய வேண்டாங்காண் பாருலகிர்
வெள்ளம் பெரிதாய் விடும். (குப்புசாமீயம்.)

இங்ஙனம் ஒழுங்குபடுத்தியவுடன் உலகெங்கும் மழைபெய்து வெள்ளம் பெருகிற்று. நவக்கிரகங்கள் விழித்தெழுந்து, தாங்கள் படுத்தபோதிருந்த நிலைமை மாறுபட்டதை யுணர்ந்து, இடைக்காடருடைய தெய்வத்திறத்தை வியந்து, அவருக்கு அறுபது வருஷங்களின் பலனையு முபதேசித்துப்போயினர். அவ் வரப்பிரசாதத்தினால் இடைக்காடர் அறுபதுவருஷ வெண்பாவை உலகோ



பகாரங்கருதிப் பாடியருளினார். இதுவே வருஷாதிநூலின் ஈற்றில் சேர்க்கப்பட்டிருக்கும் "அறுபதுவருட வெண்பா" என்பதாகும்.

இந்த அறுபது வருஷப் பெயர்களும் முதலில் பார்ஹஸ்பத்தியமான வருஷங்களுக்கே இட்டுவழங்கப்பட்டன. பிற்காலத்திலேயே இப்பெயர்களைச் சாந்திரமானவருஷங்களுக்கும், சௌரமானவருஷங்களுக்குமிட்டு வழங்கலாயினர்.

தற்போது நடைபெறும் யுவவருஷத்தில் 60—60 ஆகக் கழிந்த பிரபவாதி அக்ஷயாந்தமான பரிவிருத்திகள் 25 ஆக விருப்பதாலும், இந்த இருபத்தைந்தாம் பரிவிருத்தியில் நிகழும் யுவவருடத்துடன் 9 வருஷங்கள் சென்றிருப்பதாலும் இற்றைக்கு $(25 \times 60 + 9) = 1509$ வருஷங்களுக்கு முன்னரே தமிழ்நாட்டில் சௌரமானவருஷங்களுக்குப் பிரபவாதி அக்ஷயாந்தமான பெயர்களிட்டு வழங்கத்தொடங்கி யிருக்கவேண்டுமென்று விளங்குகின்றது.

முன்னர்க் கூறிய புராணச் சரிதங்களும் கன்னபரம்பரைக் கதைகளு மொருபுற மிருக்க, நாம் யுத்தியைக் கொண்டு ஆராயும்போது வருடங்கள் 60 ஆக ஏற்பட்டதன் காரணம் விளங்குகின்றது:—

வியாழன் சுமார் 12 வருடங்களில் 12 இராசிகளையும் ஒருமுறை சுற்றிவருகின்றது. சனி சுமார் 30 வருடங்களில் 12 இராசிகளையும் ஒருமுறை சுற்றிவருகின்றது. இதிலிருந்து வியாழன் 5 முறை பன்னிரண்டு இராசிகளையும் சுற்றிவரும் காலமும், சனி 2 முறை பன்னிரண்டு இராசிகளையும் சுற்றிவரும் காலமும் ஏறக்குறைய ஒரே அளவினதாய் 60 வருஷங் கொண்டதாகின்றது. ஆகவே, 60 வருஷங்களுக் கொருமுறை வியாழனும் சனியும் ஏறக்குறையத் தாமிருந்த இராசித் தானங்களிலேயே இருத்தல்கூடுமென்று பெறப்பட்டது. படவே, இவ்விருபெருங் கிரகங்களின் சஞ்சாரத்தினாலு மேற்படும் பலாபலன்கள் ஏறக்குறைய 60 வருஷங்களுக் கொருமுறை சரியொத்துவரவேண்டுமென்பதும் துணிபாயிற்று.

வியாழனுடைய அறுபது வருஷங்களுள், முதல் இருபது வருஷங்கள் உத்தம விம்சதி எனவும், இடையிலுள்ள இருபது வருஷங்கள் மத்திம விம்சதி என்வும், கடையிலுள்ள இருபது வருஷங்கள் அதம விம்சதி எனவும் அழைக்கப்படும். வியாழனுடைய அறுபது வருஷங்களும், 1-விஷ்ணு, 2-குரு, 3-இந்திரன், 4-அக்கினி, 5-துவஷ்டா, 6 அகிர்புதனியன், 7-பிதிரு, 8-வாசுதேவன்,

9-சோமன், 10-இந்திராக்கினி, 11-அசுவினிதேவன், 12-பகன் எனப் பன்னிரு யுகங்களாக முறையே வகுக்கப்பட்டிருக்கின்றன.

இப்பன்னிரு யுகங்களும் ஒவ்வொன்றும் முறையே 1-சம்வற்சரம், 2-பரிவற்சரம், 3-இதாவற்சரம், 4-அனுவற்சரம், 5-இத்வற்சரம் என்னும் 5 வற்சரங்களை யுடையதாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு யுகத்திலும், முதல் இரண்டு வருஷங்களில் நல்ல மழை. மூன்றாவது வருஷத்தில் அதிகமழை. நாலாவது வருஷத்தில் மத்திமமழை. ஐந்தாவது வருஷத்தில் அற்பமழை.

முதல் நாலு யுகங்களும் உத்தமம். அடுத்த நாலு யுகங்களும் மத்திமம். கடையிலுள்ள நாலு யுகங்களும் அதமம்.

பரகித நூலின்படி வியாழன் ஒரு இராசியிற் சஞ்சரிக்கும் மத்திம (சராசரி)காலம் 361 நாள் 3 நாழிகை 44 விநாடி 23 தற்பரை. ஒரு சௌரமான வருஷப்பிரமாணம் 365 நாள் 15 நாழிகை 31 விநாடி 15 தற்பரை. ஆகவே ஒரு பார்ஹஸ்பத்தியமான வருஷம் ஒரு சௌரவருஷத்திலும் பார்க்க 4 நாள் 11 நாழிகை 46 விநாடி 52 தற்பரை குறைந்ததாகும். இது சௌரவருஷப் பிரமாணத்தை நோக்கும்போது மிக அற்பமாயிருந்தமைபற்றியே பார்ஹஸ்பத்தியமான வருஷப்பெயர்களைச் சௌரவருஷங்களுக்கும் இட்டு வழங்கலாயிற்றெனலாம். ஆயினும் காலஞ் செல்லச்செல்ல இவ்வித்தியாசம் பெரிதாகிவிடும். 1875 சௌரவருஷத்தில் ஏறக்குறைய 1897 வியாழவருஷம் சம்பவிப்பதால், இரண்டிற்கும் 22 வருஷம் வித்தியாசமாகின்றது. அதாவது, 85 சௌரவருஷங்களில் ஒரு வியாழவருஷம் அதிகமாகின்றது. தற்போது பார்ஹஸ்பத்தியமான வருஷம் சௌரமான வருஷத்திலும் பார்க்க 12 வருஷங் கூடியிருத்தலினால், இற்றைக்குச் சுமார் $(85 \times 12) = 1020$) வருஷங்களுக்கு முன்னர் வியாழவருஷமும் சௌரவருஷமும் ஒன்றாக விருந்திருக்கவேண்டுமென் றறியக்கிடக்கின்றது. சுமார் $(85 \times 60) = 5100$ வருஷங்களுக் கொருமுறை இரண்டு கணக்குகளும் சரியொத்துவரும்.

இவ்வாற்றால், வியாழவருஷங்களுக்கிட்டு வழங்கிய பெயர்களையே சௌரவருஷங்களுக்கிட்டு வழங்கியபோதும், வியாழவருஷங்களின் பலன்கள் அப்பெயர்களையுடைய சௌரவருஷங்களுக்குப் பொருந்தாவென்பதும்; எனவே சௌரவருஷங்களுக்கு அப்பெயர்கள் இடுகுறிப்பெயர்களாகவே இட்டு வழங்கப்பட்டுவருகின்றனவென்பதும் தெளிவாகின்றன. இங்ஙனம் வடமொழியிலேயே



இடுகுறிப்பெயர்களாக இட்டு வழங்கப்படும் சௌரவருஷப்பெயர்கள் 60-ம் தமிழ்மொழியிற் பெயர்த்து வழங்குமிடத்தும் இடுகுறிப்பெயர்களாகவே யிருக்குமென்பது சொல்லாமலே விளங்குகின்றது.

கடைச்சங்ககாலத்துக்கு முன்னர் வருடப்பெயர்கள் தமிழில் வழங்கப்பட்டதற்குச் சான்றுகளில. ஆயின், கடைச்சங்க காலத்திருந்த சங்கப்புலவருளொருவராகிய இடைக்காடரே "அறுபது வருட வெண்பா" என்னும் நூலை இயற்றியதாக புலவர் சரித்திரங்களை நன்கு ஆராய்ந்த பெரியோர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இனி இப்பெயர்கள் வடமொழியிலிருந்து தமிழிற் பெயர்க்கப்பட்டபோது இலக்கண விதிகளுக்கமையப் பெயர்க்கப்பட்டனவா? அன்றி அவ்விதிகளுக்கமையாது ஆக்கப்பட்டனவா? என்று விசாரிக்கவேண்டிற்று. இவ்வாராய்ச்சிக்கு உதவியாக வடமொழியிலும் தமிழிலும் இப்பெயர்கள் வழங்கிவரும் வகையைக் கீழே காட்டுவாம்:—

| இலக்கம் | வடமொழி | தமிழில் உச்சரிப்பு | தமிழில் இலக்கண விதிப்படி வழங்க வேண்டிய பெயர் | தற்காலம் வழங்கிவரும் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 𑌪𑍍𑌰𑌭𑌵 | ப்ரபவ | பிரபவ | பிரபவ |
| 2 | 𑌵𑌿𑌭𑌵 | விபவ | விபவ | விபவ |
| 3 | 𑌶𑍁𑌕𑍍𑌲 | ஶுக்ல | சுக்கில | சுக்கில |
| 4 | 𑌪𑍍𑌰𑌮𑍋𑌦 | ப்ரமோத | பிரமோத | பிரமோதூத |
| 5 | 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿 | ப்ரஜாபதி | பிரசாபதி | பிரசோற்பத்தி |
| 6 | 𑌅𑌂𑌗𑌿𑌰𑌾𑌸𑍍 | அங்கிராஸ் | அங்கிரச | ஆங்கீரச |
| 7 | 𑌶𑍍𑌰𑍀𑌮𑍁𑌖 | ஸ்ரீமுக | சீமுக | ஸ்ரீமுக |
| 8 | 𑌭𑌾𑌵 | பாவ | பாவ | பவ |
| 9 | 𑌯𑍁𑌵𑌾 | யுவா | யுவை | யுவ |
| 10 | 𑌧𑌾𑌤𑍃 | தாத்ரு | தாதிரு | தாது |
| 11 | 𑌈𑌶𑍍𑌵𑌰 | ஈஶ்வர | ஈசுவர | ஈசுர, ஈசுவர |
| 12 | 𑌬𑌹𑍁𑌧𑌾𑌨𑍍𑌯 | பஹுதான்ய | பகுதானிய | வெகுதானிய |
| 13 | 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀 | ப்ரமாதீ | பிரமாதி | பிரமாதி |
| 14 | 𑌵𑌿𑌕𑍍𑌰𑌮 | விக்ரம | விக்கிரம | விக்கிரம |

| | | | |
|---|---|---|---|
| 15 𑌵𑍃𑌷 | வ்ருஷ | விருஷ | விஷு |
| 16 𑌚𑌿𑌤𑍍𑌰𑌭𑌾𑌨𑍁 | சித்ரபானு | சித்திரபானு | சித்திரபானு |
| 17 𑌸𑍁𑌭𑌾𑌨𑍁 | ஸுபானு | சுபானு | சுபானு |
| 18 𑌤𑌾𑌰𑌣 | தாரண | தாரண | தாரண |
| 19 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵 | பார்த்திவ | பார்த்திவ | பார்த்திவ |
| 20 𑌵𑍍𑌯𑌯 | வ்யய | வியய | விய |
| 21 𑌸𑌰𑍍𑌵𑌜𑌿𑌤𑍍 | ஸர்வஜித் | சர்வசித்து | சர்வசித்து |
| 22 𑌸𑌰𑍍𑌵𑌧𑌾𑌰𑍀 | ஸர்வதாரீ | சர்வதாரி | சர்வதாரி |
| 23 𑌵𑌿𑌰𑍋𑌧𑍀 | விரோதீ | விரோதி | விரோதி |
| 24 𑌵𑌿𑌕𑍃𑌤𑌿 | விகிர்தி | விகிருதி | விகிர்தி |
| 25 𑌖𑌰 | கர | கர | கர |
| 26 𑌨𑌨𑍍𑌦𑌨 | நந்தன | நந்தன | நந்தன |
| 27 𑌵𑌿𑌜𑌯 | விஜய | விசய | விஜய |
| 28 𑌜𑌯 | ஜய | சய | ஜய |
| 29 𑌮𑌨𑍍𑌮𑌥 | மன்மத | மன்மத | மன்மத |
| 30 𑌦𑍁𑌰𑍍𑌮𑍁𑌖 | துர்முக | துன்முக | { துர்முகி<br>துன்முகி |
| 31 𑌹𑍇𑌮𑌲𑌮𑍍𑌬𑍀 | ஹேமலம்பீ | ஏமலம்பி | ஏவிளம்பி |
| 32 𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑍀 | விலம்பீ | விளம்பி | விளம்பி |
| 33 𑌵𑌿𑌕𑌾𑌰𑍀 | விகாரீ | விகாரி | விகாரி |
| 34 𑌶𑌾𑌰𑍍𑌵𑌰𑍀 | ஶார்வரீ | சாருவரி | சார்வரி |
| 35 𑌪𑍍𑌲𑌵 | ப்லவ | பிலவ | பிலவ |
| 36 𑌶𑍁𑌭𑌕𑍃𑌤𑍍 | ஶுபகிர்த் | சுபகிருது | சுபகிருது |
| 37 𑌶𑍋𑌭𑌕𑍃𑌤𑍍 | ஶோபகிர்த் | சோபகிருது | சோபகிருது |
| 38 𑌕𑍍𑌰𑍋𑌧𑍀 | க்ரோதீ | குரோதி | குரோதி |
| 39 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌵𑌸𑍁 | விஶ்வாவஸு | விசுவாவசு | விசுவாவசு |
| 40 𑌪𑌰𑌾𑌭𑌵 | பராபவ | பராபவ | பராபவ |
| 41 𑌪𑍍𑌲𑌵𑌂𑌗 | ப்லவங்க | பிலவங்க | பிலவங்க |
| 42 𑌕𑍀𑌲𑌕 | கீலக | கீலக | கீலக |
| 43 𑌸𑍌𑌮𑍍𑌯 | ஸௌம்ய | சௌமிய | சௌமிய |
| 44 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣 | ஸாதாரண | சாதாரண | சாதாரண |
| 45 𑌵𑌿𑌰𑍋𑌧𑌕𑍃𑌤𑍍 | விரோதகிர்த் | விரோதகிருது | விரோதிகிருது |



| | | | |
|---|---|---|---|
| 46 𑌪𑌰𑌿𑌧𑌾𑌵𑍀 | பரிதாவீ | பரிதாவி | பரிதாபி |
| 47 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍀 | ப்ரமாதீ | பிரமாதி | பிரமாதீச |
| 48 𑌆𑌨𑌂𑌦 | ஆநந்த | ஆநந்த | ஆநந்த |
| 49 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸 | ராக்ஷஸ | இராக்ஷத | இராக்ஷத |
| 50 𑌅𑌨𑌲 | அநல | அநல | நள |
| 51 𑌪𑌿𑌂𑌗𑌲 | பிங்கல | பிங்கள | பிங்கள |
| 52 𑌕𑌾𑌲𑌯𑍁𑌕𑍍𑌤 | கால்யுக்த | காலயுக்த | காலயுக்தி |
| 53 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑍀 | ஸித்தார்த்தீ | சித்தார்த்தி | சித்தார்த்தி |
| 54 𑌰𑍌𑌦𑍍𑌰 | ரௌத்ர | இரௌத்திர | ரௌத்திரி |
| 55 𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑍀 | துர்மதீ | துன்மதி | துர்மதி |
| 56 𑌦𑍁𑌂𑌦𑍁𑌭𑍀 | துந்துபீ | துந்துபி | துந்துபி |
| 57 𑌰𑍁𑌧𑌿𑌰𑍋𑌦𑍍𑌗𑌾𑌰𑍀 | ருதிரோத்காரீ | உருதிரோற்காரி | ருதிரோற்காரி |
| 58 𑌰𑌕𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑍀 | ரக்தாக்ஷீ | இரத்தாக்ஷி | இரத்தாக்ஷி |
| 59 𑌕𑍍𑌰𑍋𑌧𑌨 | க்ரோதன | குரோதன | குரோதன |
| 60 𑌕𑍍𑌷𑌯 | க்ஷய | கய | அக்ஷய |

வடமொழியில் வருஷம் (சம்வற்சரம்) 60-ன் பெயர்களையும் மனனஞ்செய்வதற்கு ஏற்றவாறு சுலோக ரூபமாகவே கீழே காட்டுகின்றோம்:—

𑌪𑍍𑌰𑌭𑌵𑍋 𑌵𑌿𑌭𑌵𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌃 𑌪𑍍𑌰𑌮𑍋𑌦𑍋𑌽𑌥 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃।
𑌅𑌂𑌗𑌿𑌰𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑍁𑌖𑍋 𑌭𑌾𑌵𑍋 𑌯𑍁𑌵𑌾 𑌧𑌾𑌤𑌾 𑌤𑌥𑍈𑌵 𑌚॥
𑌈𑌶𑍍𑌵𑌰𑍋 𑌬𑌹𑍁𑌧𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌮𑌾𑌥𑍀 𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍋 𑌵𑍃𑌷𑌃।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌭𑌾𑌨𑍁𑌃 𑌸𑍁𑌭𑌾𑌨𑍁𑌶𑍍𑌚 𑌤𑌾𑌰𑌣𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑍋 𑌵𑍍𑌯𑌯𑌃॥
𑌸𑌰𑍍𑌵𑌜𑌿𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌧𑌾𑌰𑍀 𑌚 𑌵𑌿𑌰𑍋𑌧𑍀 𑌵𑌿𑌕𑍃𑌤𑌿𑌃 𑌖𑌰𑌃।
𑌨𑌨𑍍𑌦𑌨𑍋 𑌵𑌿𑌜𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌜𑌯𑍋 𑌮𑌨𑍍𑌮𑌥𑌦𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍌॥
𑌹𑍇𑌮𑌲𑌮𑍍𑌬𑍀 𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑍀 𑌚 𑌵𑌿𑌕𑌾𑌰𑍀 𑌶𑌾𑌰𑍍𑌵𑌰𑍀 𑌪𑍍𑌲𑌵𑌃।
𑌶𑍁𑌭𑌕𑍃𑌚𑍍𑌛𑍋𑌭𑌕𑍃𑌤𑍍𑌕𑍍𑌰𑍋𑌧𑍀 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌵𑌸𑍁𑌪𑌰𑌾𑌭𑌵𑍌॥
𑌪𑍍𑌲𑌵𑌂𑌗𑌃 𑌕𑍀𑌲𑌕𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌃 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣 𑌵𑌿𑌰𑍋𑌧𑌕𑍃𑌤𑍍।
𑌪𑌰𑌿𑌧𑌾𑌵𑍀 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑍀 𑌚 𑌆𑌨𑌂𑌦𑍋 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍋𑌽𑌨𑌲𑌃॥
𑌪𑌿𑌂𑌗𑌲𑌃 𑌕𑌾𑌲𑌯𑍁𑌕𑍍𑌤𑌶𑍍𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌰𑍍𑌥𑍀 𑌰𑍌𑌦𑍍𑌰 𑌦𑍁𑌰𑍍𑌮𑌤𑍀।
𑌦𑍁𑌂𑌦𑍁𑌭𑍀 𑌰𑍁𑌧𑌿𑌰𑍋𑌦𑍍𑌗𑌾𑌰𑍀 𑌰𑌕𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑍀 𑌕𑍍𑌰𑍋𑌧𑌨𑌃 𑌕𑍍𑌷𑌯𑌃॥

இனி, வடசொற்கள் தமிழில் எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டனவென்பதை ஆராய்வாம். வடமொழிச் சொற்கள் தமிழில் ஆக்கப்படுமிடத்து,

"பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானு
மீரெழுத்தானு மியைவன வடசொல்"

என்றபடி இருமொழிக்கும் பொதுவெழுத்தா லாக்கப்பட்ட வடசொற்கள் தமிழிலும் அதேயெழுத்துக்களாலும், வடமொழியிற் சிறப்பெழுத்துக்களா லாக்கப்பட்டுள்ளன தமிழில் அவ்வவற்றின் பொதுவெழுத்துக்களாலும் ஆக்கப்பட்டன. சில வடசொற்கள் தமிழில் இலகுவாக உச்சரிக்கக்கூடிய விதமாகத் திரித்தும் ஆக்கப்பட்டன.

வடசொற்களாயினும் மற்றும் பிறபாஷைச் சொற்களாயினும், தமிழில் ஆன்றோர்களால் இலக்கண முறைப்படி பெயர்த்தோ, அல்லது இலகுவாக உச்சரிக்கக்கூடிய வசதியை நோக்கித் திரித்தோ ஆக்கப்பட்டு, மற்றைய தமிழ்ச்சொற்கள் போலவே நூல்களிலும் ஆன்றோர் வழக்கிலும் வழங்கப்பட்டுவந்தால், பிற்காலத்தவரும் அச்சொற்களை அவ்வாறே வழங்குதல் முறையாகும். இதனால் வடமொழியிலிருந்து (இலக்கண நூல் யாக்கப்பட்டபின்) புதிதாகத் தமிழில் ஆக்கப்படும் வடசொற்கள் மாத்திரம் இலக்கண நூல் விதிகளுக்கமைய ஆக்கப்படவேண்டுமென்பதும், தொன்றுதொட்டு ஆன்றோரால் தமிழில் பெயர்த்து வழங்கப்பட்டுவரும் சொற்கள் இலக்கண நூல்விதிகளுக் கமைவின்றியிருப்பினும் அவற்றையே கொள்ளவேண்டுமென்பதும்,

"வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களாற் பெறப்படுகின்றன.

மேற்காட்டிய வடமொழி வருடப்பெயர்களையும் தமிழில் தற்காலம் வழங்கும் வருடப்பெயர்களையும் நோக்கும்போது, பிர



மோதூத, பிரசோற்பத்தி, பவ, தாது, விஷு, ஏவிளம்பி, பிரமாதீச, நள, அக்ஷய என்னும் வருடப் பெயர்கள் இலக்கணவிதிகளுக் கமைவின்றி, அதிக் திரிபுகளைப் பெற்று வழங்கக் காண்கின்றோம். ஆயினும், இங்ஙனம் திரிக்கப்பட்டவிடத்தும் சில சொற்கள் தக்க காரணங் கொண்டே திரிக்கப்பட்டனவென்பதை விளக்குவாம்.

பிரமோத அதன்பின் என்று பொருள்படும் பிரமோத + அத = பிரமோதோத என்ற சுலோகப்பகுதி முழுவதையுமே வருடப்பெயராக வெடுத்து, அதனையுந் திரித்துப் பிரமோதூத என்று ஆக்கியிருக்கின்றனர். இங்ஙனம் செய்யாது பிரமோத என்றே விட்டிருந்தால், அது பிரமாதி என்பதுடன் உச்சரிப்பு ஏறக்குறைய ஒத்திருத்தல்பற்றி இன்ன வருஷமெனப் பிரித்தறிவது கஷ்டமாயிருக்கும். யாதொரு பொருளும் படவாது பிரமோதோத என்றிருப்பதிலும் பார்க்கத் தோத என்பதைத் தூத என்று திருத்தினால் சிறிது பொருளாற்றலு மேற்படக் காரணமாகும். இக்கருத்துப்பற்றியே இதனைத் தற்காலத்துச் சிலர் பிரமதூத என்றும் திரித்து வழங்குகின்றனர்.

பாவ என்பது தமிழில் பாபம் என்னும் அமங்கலப் பொருளைப் பயக்கக்கூடியதாயிருத்தலான் அதனைப் பவ என்று திரித்து மங்கலப் பொருளுடைய பெயராக்கினர்.

ப்ரமாதீ என்பது 13-வது வருடம். ப்ரமாதீ என்பது 47-வது வருடம். இவை யிரண்டற்கும் ஈற்றிலுள்ள சிறப்பெழுத்துக்கள் தமிழில் தி என்னும் பொதுவெழுத்தான்மாத்திரமே விளக்கப்படவேண்டியிருத்தலான் 13-வதுபிரமாதி, 47-வதுபிரமாதி என்று இடர்ப்பட்டு வழங்கவேண்டியதாகும். அன்றேல், பிரமாதி என்பது எத்தனையாவது வருடமென்று விளங்கிக்கொள்ள முடியாது. இங்ஙனம் வேறுபாடு தோற்றுவித்தற்கு இவற்றுள் ஒன்றைத் திரித்துரைத்தல் இன்றியமையாதது. ஆகவே, முதலிலுள்ள 13-வது பிரமாதியை பிரமாதி என்றே வைத்தும், 47-வது பிரமாதியை, "பிரமாதீ யும்" என்று பொருள்படும் "பிரமாதீ ச" என்று, வடமொழிச் சுலோகத்திலிருந்தவாறே கொண்டும் இரண்டு வருஷங்களையும் இலகுவாகப் பிரித்தறியுமாறு வழங்கச் செய்தனர்.

அ + நல = நலமற்றது என்னும் பொருளுடைய அமங்கலச் சொல்லை, நள என்று மங்கலப் பொருளுடையதாக மாற்றினர்.

க்ஷய=குறைவுள்ளது என்னும் பொருளுடைய அமங்கலச் சொல்லை அ+க்ஷய=குறைவில்லாதது என்னும் பொருளுடையதாக மங்கலமாக்கினர்.

இவ்வாற்றால், வடமொழியிலிருந்து வருடப்பெயர்கள் தமிழில் பெயர்க்கப்பட்டபோது வடமொழியிலுள்ள பொருளை நோக்காது பெரும்பாலும் தமிழில் உச்சரிப்பதற்கு இலகுவாகவும், சிலவிடங்களில் வருடங்களைப் பிரித்தறிவதற்கு ஏற்றவாறும், சிலவிடங்களில் தமிழில் நற்பொருள் பயக்குமாறுமே தீர்க்காலோசனையுடன் ஆக்கப்பட்டனவென்பது நன்கு புலப்படுகின்றது.

இங்ஙனமாகவும், வருஷப்பெயர்களைக் கூடியவரையில் வடமொழியுச்சரிப்புக்கிணங்கவே திருத்தி வழங்கவேண்டும் என்னும் கொள்கை சில பஞ்சாங்ககணிதர்களைச் சிலகாலமாகப் பற்றிக்கொண்டது. இங்ஙனம் செய்பவர் ஒரேகணிதக்கொள்கையாளராயிருத்தலினால் அக்கணிதக்கொள்கைக்கும் இப்பெயர்களுக்கும் யாதும் சம்பந்த மிருக்கலாமோ? என்றும் சிலர் ஐயமுறுகின்றனர். உண்மையை நோக்குமிடத்து, வருஷம், மாதம், திதி, நக்ஷத்திரம் முதலியவைகளின் பெயர்களுக்கும் கணிதக்கொள்கைகளுக்கும் யாதும் சம்பந்தமேயில்லை. இப்பெயர்கள் எக்கொள்கைகளையுடையார்க்கும் பொதுவானவையேயொழிய ஒருதிறத்தார்க்கு மாத்திரம் சொந்தமானவையன்று. அன்றியும், பழைய கணிதக்கொள்கைகளைப் பின்பற்றிப் பஞ்சாங்கங் கணிப்போர் தற்காலத்துத் தமிழில் வழங்கிவரும் பெயர்களையே கைக்கொள்ளவும், புதிய கணிதக் கொள்கைகளை மேற்கொண்டு சீர்திருத்தஞ்செய்வேமென முற்பட்ட கணிதர்கள் தற்காலத்து வழக்கத்தைவிட்டுப் பண்டைக்காலத்து வடமொழி யுச்சரிப்புகளை உலகவழக்கிற் புகுத்த முயற்சித்தல் பெருவியப்பே! இக்கணிதருட் சிலர் வருஷப்பெயர்களை மாத்திரம் வடமொழிக்கிணங்க மாற்றிக்கொண்டு, ஏனைய மாதம், நக்ஷத்திரம் முதலிய பெயர்களை முன் வழங்கிவந்தவாறே திருத்தாது வழங்குகின்றார்கள். இவர்கள் வைகாசியை வைசாகி என்றும், ஆடியை ஆஷாடியென்றும், மாசியை மாகியென்றும், புநர்பூசத்தைப் புநர்வசுவென்றும், ஆயிலியத்தை ஆசிலேஷமென்றும், பூரத்தைப் பூர்வபல்குனியென்றும், உத்தரத்தை உத்தரபல்குனியென்றும், அனுஷத்தை அனுராதையென்றும், கேட்டையை ஜ்யேஷ்டையென்றும், பூராடத்தைப் பூர்வாஷாடமென்றும், உத்தராடத்தை உத்தராஷாடமென்றும், அவிட்டத்தைச் சிரவிஷ்டையென்றும், சதயத்தைச் சதபிஷக்கென்றும், பூரட்டாதியைப் புரோஷ்டபதமென்றும், உத்தரட்டாதியை உத்தரப்ரோஷ்டபதமென்றும் இப்படியே ஏனையவற்றையும் வடமொழிப்படி மாற்றி வழங்கப் பின்னிற்பதேனோ?



தமிழில் 12 உயிரெழுத்துக்களும் 18 மெய்யெழுத்துக்களும் மாத்திரமே யுளவாதலானும், வடமொழியில் 16 உயிரெழுத்துக்களும் 35 மெய்யெழுத்துக்களு முளவாகலானும் வடமொழிச் சொற்களைத் தமிழ்மொழி பயில்வோர் அவ்வாறே உச்சரிக்க முயலுதல் அசாத்தியம். அங்ஙன முச்சரிக்குமாறு வற்புறுத்தின் வடமொழிப் பயிற்சியில்லாத மக்கள் அச்சொற்களை முற்றாய் வழங்காதொழிக்கவே முயற்சிப்பர். தற்காலத்தில் பலர் தமிழ்வருஷப் பெயர்களை வழங்காது ஆங்கிலவருஷக் கணக்கையே எக்கருமத்திலும் கைக்கொள்ளுதற்கு பல வருஷப்பெயர்கள் அவர்களால் எளிதில் உச்சரிக்கவும் ஞாபகத்தில் வைத்திருக்கவும் முடியாமையுமோர் காரணமாகுமன்றோ?

வஷ-ம் என்ற வடசொல்லைத் தமிழிற் பெயர்க்கும்போது வருடம் என்றே வரும். இவ்வாறே தமிழ் இலக்கியங்களில் வழங்கப்பட்டுவருகின்றது. ஆனால், தற்காலத்தில் வடமொழிக்கணுள்ள ஜ ஷ ஸ ஹ க்ஷ என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களையும் அவற்றின் உயிர்மெய்யெழுத்துக்களையும் தமிழில் பாலபாடங்களிலும் மற்றும் நூல்களிலும் பத்திரிகைகளிலும் தமிழ் எழுத்துக்களைப் போலவே கலந்து உபயோகித்துவருதலினால் அவ்வெழுத்துக்களைக்கொண்ட வடசொற்களையும் அவ்வெழுத்துக்களை உபயோகித்தே தமிழில் பெயர்த்து வழங்குதல் சிறப்பாகும். இதனால் வருடம் என்பதிலும் பார்க்க வருஷம் என்று வழங்குதலே சிறப்புடைத்தென்பது நன்கு புலப்படும். ஆனால், "வர்ஷம்" என்ற சொல் தமிழிலக்கியங்களில் இதுவரை காணப்படாமையாலும், அது தமிழுச்சரிப்புமுறைக்கு விரோதமாயிருப்பதாலும் அங்ஙனம் வழங்குதல் ஏற்றதன்று.

நெடுங்காலத்துக்கு முற்பட்ட சம்பவங்களைக் குறிக்கும்போது சாலிவாகன சகாத்தம், கலியத்தம் முதலியவற்றைக் கொண்டு கணக்கிடுதலே ஏற்றதாயினும், ஒருவரின் சீவியகாலத்துக்குட்பட்ட சம்பவங்களைப் பிரபவாதி 60 வருஷப் பெயர்களைக் கொண்டு வழங்குதல் இலகுவானதும் ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடியதுமான முறையாகும். எனவே, இங்ஙனம் வழங்குமிடத்து, ஒவ்வொருவரும் வருடங்கள் 60-ன் பெயர்களையும் சரியாக மனனஞ்செய்திருப்பதுடன், அவற்றின் வரிசைக்கிரமத்தையும் நன்கறிந்திருத்தல் அத்தியாவசியகமாகும். தற்காலத்தில் தமிழ்க்கல்வி சிறிதும் நிரம்பப்பெறாத பல ஆரம்பசோதிடர்கள் தாமெழுதும் ஜாதகக்குறிப்பு, ஜாதகம் முதலியவைகளில் வருஷங்களின் பெயர்களை மனம்போனவாறெல்லாம் பிழையாக எழுதி மயங்க வைக்கின்றனர். இவர்களெழுதும் வருஷப்பெயர்களைச் சகாப்தம் முதலியவற்றைக்கொண்டன்றி எதுவென்று நிச்சயிக்க முடியா

திருக்கின்றது. பிலவ என்னும் வருஷப்பெயரை ஒருவர் ஓர் சாதகத்தில் பிலபவ என்று வரைந்திருக்கின்றார். இது பிரபவ என்பதன் திரிபா? அன்றி பிலவ என்பது பிலவவ என்று வகரம் இரட்டித்துப் பின் பிலபவ என்று திரிந்ததா? என்றுணர்தல் முடியாது. சகாத்தம் முதலிய ஏனைய குறிப்புக்களைக் கொண்டே அது பிலவ எனக் காணக்கூடியதாயிருந்தது. இங்ஙனம் பிலவ என்பதைப் பிலபவ என்று பிழைபடக் குறித்தவாறே, பிரபவ என்பதையும் பிலபவ என்றும், விபவ என்பதை விப என்றும் பிரமோதூத என்பதைப் பிரமதூத என்றும், சித்தார்த்தி என்பதை சித்தாத்ரி என்றும் இன்னும் பலவித விபரீதங்களுடனும் எழுதிவருகின்றார்கள்.

தென்னிந்தியாவில் ஓர் வாராவதிக்கு அதனைக் கட்டிய (Engineer) சிற்பியின் பெயரால் (Hamilton Bridge) "ஹமில்டன் வாராவதி" என்று முதன்முதல் பெயரிடப்பட்டது. அப்பெயர் காலகதியில் அமிட்டன் வாராவதி—அமட்டன் வாராவதி—என்று திரிந்து, ஈற்றில் "அம்பட்டன் வாராவதி" என்று வழங்கப்படலாயிற்று. பிற்காலத்தில் அதன் உண்மைப்பெயரிதுவென்றறியாதவர்கள் அப்பெயரைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் பெயர்த்து (Barber Bridge) "பார்பர் பிறிட்ஜ்" என்று அழைக்கலாயினர். இக்கதைபோலவே, வடமொழியிலிருந்து தமிழில் திரித்து வழங்கப்பட்டுவரும் வருஷப்பெயர்கள் சில, தமிழ் வழக்கின்படியே வடமொழியில் பெயர்த்து வழங்கப்படுகின்றன. திரு. T. K. இராமச்சந்திர ராவ் அவர்களியற்றிய "நவீன சம்ஸ்கிருத பாலபோதினி" என்னும் புத்தகத்தில், வருஷம் 60-ன் பெயர்களைத் தேவநாகரலிபியில் அச்சிட்டிருக்குமிடத்தில் (சூம்கிரஸ, யாதந, வ்ருஷாயீவ, ஸக்ஷய) ஆங்கிரஸ, தாது, ப்ரமாதீச, அக்ஷய என்று காணப்படுகின்றன.

இவ்வாறெல்லாம் பிழைகளேற்படுவதற்குக் காரணம், இவர்கள் முதன்முதல் வருஷங்கள் 60-ன் பெயர்களையும் மனனஞ் செய்யும்போது சரியான பிரதிகளைப் பார்த்து மனனஞ்செய்யாமையும், அங்ஙனம் மனனஞ்செய்தவற்றில், ஞாபகக்குறைவால் சிலவற்றின் பெயர் சந்தேகத்துக்கிடமாகத் தோற்றும்போது, முன்பின் வருஷங்களைப் பார்த்துத் தமது புத்திக்கிசைந்தவாறே அவ்வருஷத்தின் பெயரை அமைத்து வழங்குதலுமேயாம். ஆதலினால் இனியேனும் இத்தகைய பிழைகளேற்படாதவாறு யாவரும் ஒரே விதமான வருஷப் பெயர்களை வழங்குதலே சிறப்பாம். அங்ஙனம் வழங்குமிடத்தும் ஆன்றோர் இதுகாறும் வழங்கிவந்தவாறே வழங்குதல் அத்தியாவசியமாகும்.

---

உ

# இடைக்காடர் வரலாறு

அறுபதுவருட பலன் என்னும் இந்நூலை இயற்றியவர் பாண்டிமண்டலத்திலே மதுரைமாநகருக்குக் கிழக்கிலிருக்கும் இடைக்காடு என்னும் ஊரிற் பிறந்த இடைக்காடர் என்பவராகும். சிலர் இவரூர் மலையாளத்திலுள்ள இடைக்காடு என்பர். இவர் மதுரையிலிருந்த கடைச்சங்ககாலப் புலவர்களுளொருவர். கபிலர் என்னும் புலவருக்கு நண்பர். திருவள்ளுவர் திருக்குறளைப் பாடி அரங்கேற்றிய காலத்தில்,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகுத்திக்
குறுகத் தறித்த குறள்"

என்னுங் கவிபாடிச் சிறப்பித்தவர். இவர் தமிழ்ப்புலமையின் மாத்திரமன்றிச் சோதிடநூலாராய்ச்சியிலும் தெய்வபக்தியிலுஞ் சிறந்து விளங்கிச் சித்தர்களுள்ளும் ஒருவராகவிருந்தவர்.

அக்காலத்தில் மதுரைமாநகரில் அரசனாகவிருந்த குலசேகரபாண்டியன் "இலக்கணமும் இலக்கியமும் வரம்புகண்டோன்" எனக்கேட்டு அவன்மீது இவர் கவிபாடிச் சென்றபொழுது, அரசன் கவியைக்கேட்டு வாளாவிருந்தமையால் அவன் செய்த அவமானத்தை மதுரைக் கோயிலுட் புகுந்து சொக்கநாதசுவாமிக்கு முறையிட்டனர். அதுகேட்ட சொக்கநாதசுவாமி தேவிசமேதராய் மற்றைப் புலவர்களோடும் மதுரைக் கோயிலினின்றும் புறப்பட்டு, வைகைச் செய்கரையின் தென்பாலடைந்து வீற்றிருக்க, பாண்டியன் சுவாமியைக் கோயிலுட் காணாது பயந்து, எங்குந் தேடி வந்து கண்டு, பணிந்து குறையிரந்து மீண்டழைத்துக்கொண்டுபோய் முன்போல் கோயிலில் வீற்றிருக்கச்செய்தனன். பின்னர், சொக்கநாத சுவாமியின் திருவிளையாடலுக்குக் காரணமாயிருந்த இடைக்காடரை அழைப்பித்து, அவர் முன் பாடிய கவிகளைக் கேட்டு, அவருக்குப் பல பரிசில்களும் ஈந்து மகிழ்வித்தனன்.

இவர் இந்நூல் மாத்திரமன்றி பல தனிநிலைக்கவிகளும், ஊசிமுறி என்பதும் பாடியவர்.

ஊசி முறி.

மின்றலங் கோதை மலர்மிலைந் தூடுவங்
கென்று திரியு மிடைமகனே—சென்று
மறியாட்டை யுண்ணுமை வன்கையால் வல்லே
அறியாயோ வண்ணுக்கு மாறு.

---

உ

சிவமயம்

# இடைக்காடர் அருளிச்செய்த

# அறுபது வருட பலன்

## காப்பு

திருவார் கரிமுகன்றன் சேவடியைப் போற்றி
மருவா ரறுபான் வருடந்—தருபலனை
மாவிருடி கர்க்கர் வகுத்த வழிப்படிவெண்
பாவிலுரைப் பேன்யான் பரிந்து.

### பிரபவ வருட பலன்

ஆதி பிரபவத்தி லம்புவியின் மானுடர்க்குச்
சோதனையாய்ச் சாவுதுன்பந் தோன்றுமே—தீதில்
தருப்பொலியு மஃகமிகுந் தண்மாரி யோங்கும்
பருத்தியுப்பு மாமணக்கும் பாழ். 1

### விபவ வருட பலன்

செய்ய விபவதனிற் செய்புவனந் தான்விளையும்
பெய்யுமழை யெங்கும் பெருகுமே—ஐயமின்றி
மிக்க சுகம்பெறுவர் மேதினியோர் வேந்தர்க்குத்
தக்கவழி மானமுண்டு தான். 2

### சுக்கில வருட பலன்

நன்மைபெறுஞ் சுக்கிலத்தி னுடெங்கு மேசெழிக்கும்
புன்மைவினை நீங்கிப் பொருள்சேரும—நன்மை
இருக்கும் பசுக்கறக்கு மெங்குமழை யோங்கும்
பருத்தியுப்புந் தான்குறையும் பார். 3

### பிரமோதூத வருட பலன்

வரும்பிரமோ தூத வருடமழை கொஞ்சங்
கரும்பு மிகப்பலிக்குங் கண்டாய்—திரும்பப்
பயமுண்டு பூமி பலியாது வேந்தர்
நயமுண்ட தாயிருப்பர் நன்கு. 4

### பிரசோற்பத்தி வருட பலன்

துய்யபிர சோற்பதியிற் றோன்றுமே நற்காலம்
பெய்யு மழையதிகம் பேருழவாம்—வையகத்தில்
உள்ளவகைச் சாதி யுயிர்தழைத்து வாழ்ந்திருப்பர்
கள்ளமில்லை யென்றே நீ காண். 5



### ஆங்கீரச வருட பலன்

ஆங்கி ரசவருட மான மழைமிகுத்து
நீங்காம னீரோடி நீள்புவனம்—பாங்காய்
விளைவின்றிப் பஞ்ச மிகுமே யுயிர்கட்
களவின்றிச் செல்வ மறும். 6

### ஸ்ரீமுக வருட பலன்

தேடுநற் சீமுகத்திற் றேசந் தழைத்தோங்கும்
நாடியே முன்மழையோ நல்காது—நீடியபின்
நானமழை யுண்டு நவதா னியம்பெருகுந்
தானேவு முண்டென்றே சாற்று. 7

### பவ வருட பலன்

பவவருடந் தோன்றிற் பரிவார மோங்குந்
தவமிகுதி யாகுந் தலத்தில்—நவமதிகம்
பெய்யுமழை தானதிகம் பிள்ளைபெறு மாதர்தாம்
ஐய மடிவ ரறி. 8

### யுவ வருட பலன்

யுவவருடம் பூவுலகி லுள்ளோர்க ளேயாற்
றவவருந்து வார்பசுமா தங்கும்—நவமாக
வாழும் பரிவார மாரியுண்டு நெல்விளையுந்
தாழ்வான தொன்றுமில்லை தான். 9

### தாது வருட பலன்

தாது வருடந் தராதலத்தோர் வாழ்ந்திருப்பர்
வேதனையு மில்லை விளைவுண்டு—சீதமழை
பெய்யும் பரிவாரம் பேருடனே யெந்நாளும்
உய்யும் படியுலகி லுண்டு. 10

### ஈசுர வருட பலன்

நக்க னெனுமீச் சுரவருட நாமமதில்
மிக்கபதி னெட்டுவகை வேளாண்மை—தக்க
விளைவுண்டு மாரியுண்டு மேதினியின் மாக்கள்
தளர்வின்றி வாழ்வார் தழைத்து. 11

### வெகுதானிய வருட பலன்

வெகுதா னியவருட மேதினியி லெல்லாந்
தருமாரி பின்பெய்யுந் தான்முன்—முகில்சோர்ந்து
கொஞ்சமழை பெய்யுங் குலவு கழைதழைக்கும்
பஞ்சம் பருத்தியுப்புப் பாழ். 12

### பிரமாதி வருட பலன்

வெய்யபிர மாதியினில் வேந்தர் கொடுமையுறும்
ஐயகேள் பஞ்ச மடுக்குமே—செய்ய
பசுக்கள் மெலியுமே பாரிற் குடிகள்
சிசுக்க ளுடனலைவார் தேர். 13

### விக்கிரம வருட பலன்

விக்கிரம வாண்டதனின் மேவியநன் மாரிகொஞ்சம்
அக்க ளுயிர்க ளழியுமே—தொக்க
பயிர்தீயும் நோயும் பழியுமாம் பின்பு
செயிர்தீர்ந்த வோர்மழையாஞ் செப்பு. 14

### விஷு வருட பலன்

பாரில் விஷுவருடம் பாலர்க்குப் பீடையுண்டாம்
கார்பொழிவ தில்லைமுற் காலத்தில்—ஏரி
பெருகாது பிற்காலம் பெய்யுமே மாரி
இருகால முஞ்சமனென் றெண். 15

### சித்திரபானு வருட பலன்

சித்திர பானு சிறக்கு மழைமிகுத்து
வித்துள்ள வெல்லாம் விளையுமே—எத்திசையும்
பார்ப்பாருக் காகாது பார்வேந்தர்க் கேநலமாந்
தீர்ப்பாகப் பூமிபயஞ் செப்பு. 16

### சுபானு வருட பலன்

சொன்னேன் சுபானுதனிற் றோன்றுமழை கொஞ்சமாம்
மின்னே விளைவு பெருகாது—மன்னேதுன்
மத்திமக்கோ ளுண்டா மடியுநாற் காற்சீவன்
சற்றுஞ் சுகமில்லைத் தான். 17

### தாரண வருட பலன்

தாரணத்தின் மாரியறுந் தாரணியிற் கேடுமல்கும்
ஓரினுயிர் வர்க்கமவை யுய்யாவாற்—பார்பிணியால்
ஐய மடியுமே யஃகங் குறையுமே
வெய்யர் பயமே மிகும். 18

### பார்த்திப வருட பலன்

தேச மிசைபார்த் திபவருடஞ் சிங்களத்தார்
தேசங் கெடுமனந்த தேசத்து—ராசர்
அநியாயஞ் செய்வா ரதமேறு மாரி
இனிதாம் விளைவுமுள தாம். 19



### விய வருட பலன்

வியவருட மாரி விளைவுண்டாஞ் சீனம்
சுபவாழ் வுடனே சுகமாம்—உயர்வாம்
பதினெட்டு வித்தும் பதிவாய்ப் பலிக்குஞ்
சதிர்பெறுநல் லஃகமிகுந் தான். 20

### சர்வசித்து வருட பலன்

சருவசித்து தன்னிற் றலத்திற் பலவும்
ஒருபதி னெட்டுவித்து மோங்கும்—பெருமையுடன்
மிக்கவிளை வுண்டாகு மேன்மேலு மாரியுண்டாந்
தக்க சுகம்பெருகுந் தான். 21

### சர்வதாரி வருட பலன்

நற்சருவ தாரிதனி னல்லமழை யுண்டாகும்
அற்பவித் தானவெல்லா மாகாது—சொற்பெரிய
ஐந்து வகைவிளைவு மாகுஞ் சுகமுடனே
மைந்தரெல்லாம் வாழ்ந்திருப்பார் மற்று. 22

### விரோதி வருட பலன்

நீடு விரோதி நிலத்தின் மழைமிகுதி
மேடுகா டெல்லாம் விளைவுண்டாம்—நீடும்
அரசர்போ ராலே யழியு முலகந்
திரமிகுநோய் சேருமெனச் செப்பு. 23

### விகிர்தி வருட பலன்

வையந் தனில்விகிர்தி மாரி விளைவதிகஞ்
செய்ய வளங்கள் சிறக்குமே—ஐயகேள்
மாடு கழுதை வயப்பரி நோய்மிக்குச்
சாட மெலியுமே தான். 24

### கர வருட பலன்

கரவருட மாரிபெய்யுங் காசினியு முய்யும்
உரமிகுத்து வெள்ளமெங்கு மோடும்—நிரைமிகுத்து
நாலுகாற் சீவ னலியுநோ யான்மடியும்
பாலுநெய்யு மேசுருங்கும் பார். 25

### நந்தன வருட பலன்

நந்தனத்தின் மாரியறு நாடெங்கும் பஞ்சமிகும்
நந்துமுயிர் நோயா னலியுமே—அந்தரத்தின்
மீனுதிருந் தூமமெழும் மிக்க கெடுதியுண்டாம்
கோன்மடிவ னென்றேநீ கூறு. 26

### விஜய வருட பலன்

மண்ணில் விசய வருட மழைமிகுதி
எண்ணுசிறு தானியங்க ளெங்குமே—நண்ணும்
பயம்பெருகி நொந்து பரிவார மெல்லாம்
நயங்களின்றி வாடுமென நாட்டு. 27

### ஜய வருட பலன்

செயவருடந் தன்னிலே செய்புனங்க ளெல்லாம்
வியனுறவே பைங்கூழ் விளையும்—நயமுடனே
அஃகம் பெரிதா மளவில் சுகம்பெருகும்
வெஃகுவார் மன்னரிறை மேல். 28

### மன்மத வருட பலன்

மன்மதத்தின் மாரியுண்டு வாழுமுயி ரெல்லாமே
நன்மைமிகும் பல்பொருளு நண்ணுமே—மன்னவரால்
சீனத்திற் சண்டையுண்டு தென்றிசையிற் காற்றுமிகுங்
கானப் பொருள்குறையுங் காண். 29

### துர்முகி வருட பலன்

மிக்கான துர்முகியில் வேளாண்மை யேறுமே
தொக்கமழை பின்னே சொரியுமே—மிக்கான
குச்சர தேசத்திற் குறைதீர வேவிளையும்
அச்சமில்லை வெள்ளையரி தாம். 30

### ஏவிளம்பி வருட பலன்

ஏவிளம்பி மாரியற்ப மெங்கும் விலைகுறைவாம்
பூவில் விளைவரிதாம் போர்மிகுதி—சாவதிகம்
ஆகுமே வேந்த ரகியாய மேபுரிவார்
வேகுமே மேதினிதீ மேல். 31

### விளம்பி வருட பலன்

விளம்பி வருடம் விளைவுகொஞ்ச மாரி
அளந்து பொழியு மரசர்—களங்கமுடன்
நோவான் மெலிவரே நோக்கரிதா குங்கொடுமை
ஆவா புகலவரி தாம். 32

### விகாரி வருட பலன்

பார விகாரிதனிற் பாரணநீ ருங்குறையும்
மாரியில்லை வேளாண்மை மத்திமமாம்—சோரர்
பயமதிக முண்டாம் பழையோர்கள் சப்பாத்
தியவுடைமை விற்றுண்பார் தேர். 33



### சார்வரி வருட பலன்

சாருவரி யாண்டதனிற் சாதிபதி னெட்டுமே
தீரமறு நோயாற் றிரிவார்கள்—மாரியில்லை
பூமிவிளை வில்லாமற் புத்திரரு மற்றவரும்
ஏமமின்றிச் சாவா ரியம்பு. 34

### பிலவ வருட பலன்

பிலவத்தின் மாரிகொஞ்சம் பீடைமிகும் ராசர்
சலமிகுதி துன்பந் தருக்கும்—நலமில்லை
நாலுகாற் சீவனெல்லா நாசமாம் வேளாண்மை
பாலுமின்றிச் செய்புவனம் பாழ். 35

### சுபகிருது வருட பலன்

சுபகிருது தன்னிலே சோழதே சம்பாழ்
அவமாம் விலைகுறையு மான்சாம்—சுபமாகும்
நாடெங்கு மாரிமிகு நல்லவிளை வுண்டாகுங்
கேடெங்கு மில்லையதிற் கேள். 36

### சோபகிருது வருட பலன்

சோப கிருதுதன்னிற் றொல்லுலகெல் லாஞ்செழிக்குங்
கோப மகன்று குணம்பெருகுஞ்—சோபனங்கள்
உண்டாகு மாரி யொழியாமற் பெய்யுமெல்லாம்
உண்டாகு மென்றே யுரை. 37

### குரோதி வருட பலன்

கோரக் குரோதிதனிற் கொள்ளைமிகுங் கள்ளரினாற்
பாரிற் சனங்கள் பயமடைவார்—கார்மிக்க
அற்ப மழைபெய்யு மஃகம் குறையுமே
சொற்பவிளை வுண்டெனவே சொல். 38

### விசுவாவசு வருட பலன்

விசுவா வசுவருடம் வேளாண்மை யேறும்
பசுமாடு மாடும் பலிக்குஞ்—சிசுநாசம்
மற்றையரோ வாழ்வார்கண் மாதவங்கள் மீறுமே
யுற்றுலகி னல்லமழை யுண்டு. 39

### பராபவ வருட பலன்

மிக்க பராபவத்தின் மேதினியிற் பின்மழையாந்
தக்க பசுக்க டழைக்குமே—இக்குப்
பலிக்காது நான்குவகைப் பல்லுயிர்க்கு மின்பங்
கலிக்கா தெனவே கருது. 40

### பிலவங்க வருட பலன்

பிலவங்க வாண்டதனிற் பேதகங்கண் மிஞ்சிப்
பலவந்த மாமடிவார் பாரில்—நலமுந்து
வேளாண்மை மெத்த விளையுமே யஃகமோ
கேளா யதிகமதி கம். 41

### கீலக வருட பலன்

கிலகத்தின் மாரிமிகுங் கெம்பீர மெத்தவனு
கூலமுறு மானிடர்க்குக் கொண்டாட்டம்—ஞாலமதில்
நல்விளைவுண் டாகுமே நாடெங்கு மேசெழிக்கும்
பல்வளமு மோங்குமெங்கும் பார். 42

### சௌமிய வருட பலன்

செய்ப சவுமியத்திற் றேசத்திற் பல்லுயிரும்
உய்யு மழைமிகுதி யுண்டாகும்—வெய்ய
வினையகலும் பூமி விளைவினுஞ் செல்வம்
மனையகலா தென்றே மதி. 43

### சாதாரண வருட பலன்

சாதா ரணவருடந் தானியங்க ளோங்குமே
ஆதார மாமழைபின் னாகுமே—தீதாக
இல்லையெனும் பஞ்ச மிலாடத்திற் றோன்றுமென்றே
சொல்லுப்பு வெள்ளைசுருங் கும். 44

### விரோதிகிருது வருட பலன்

மிக்க விரோதிகிர்த் மாரி விளைவுண்டு
தக்க சிறப்புந் தனமுண்டு—இக்குண்டு
உப்புப் பருத்தி யுலகத்தி லேகுறையுந்
துப்புமிகு மாமணக்காஞ் சொல். 45

### பரிதாவி வருட பலன்

சொன்னபரி தாவிதனிற் றெல்லுலகின் மாரிகொஞ்சம்
பொன்னே விளைவுளதாம் பூதலத்திற்—பன்னும்
பருத்தியுப்போ டாமணக்குப் பாரிற் குறையும்
வருத்தமற வேயுயிர்வா ழும். 46

### பிரமாதீச வருட பலன்

நற்பிரமா தீசத்தி னாட்டிலே சாவதிகம்
சொற்பெரிய மாரிமிகத் தோன்றுமே—மற்பிடித்து
மல்லிட்டு மாண்டிடுவர் வாளினா லேயறுவர்
கொல்லும் வறுமையெனக் கூறு. 47



### ஆனந்த வருட பலன்

ஆனந்த வாண்டதனி லாகாத தொன்றுமில்லை
வானம் பொழியும் வரிவிளையுந்—தேனே
கரும்புண்டா மாமணக்குக் காணாது காயில்
வருந்தானி யங்குறைவாம் வந்து. 48

### இராக்ஷத வருட பலன்

ராட்சதத்தில் மாரியறு மின்வானிற் றாமமெழுந்
தாட்சியொடு தேயந் தயங்குமே—சூட்சியுடன்
மன்னர் பயமிகுதி மாதே யுலகினிலே
யன்னமறு மென்றுணரு வாய். 49

### நள வருட பலன்

சீர்தீர் நளவருடஞ் சேர்வடக்கி லேகலகம்
பாரோர் மடிவர் படையெழுச்சி—காரோ
பொழியா திரத்தப் புணரி பெருகும்
அழியு மரசர் படை. 50

### பிங்கள வருட பலன்

பிங்களத்திற் காவேரி யாறு பெருகியே
கொங்கவள நாட்டிற் குடியழிக்கும்—மங்களமாய்த்
தென்பூமி தான்விளையுஞ் சேரும் பொருளோடு
மன்கேட தாம்வடக்கின் மற்று. 51

### காலயுத்தி வருட பலன்

காலயுத்தி யாண்டதனிற் காஞ்சியிலே பஞ்சமிகுங்
காலமழை பெய்யாது காசினியில்—மேலுந்
தெலுங்கத்திற் கொஞ்சமழை தென்றிசையி லின்ப
நலங்காணு மென்றே நவில். 52

### சித்தார்த்தி வருட பலன்

ஆனசித் தார்த்திதனி லற்பமழை யுண்டாகும்
ஏனல்கம் பிராச்சியத்தி லேமிகுதி—ஊனமுடன்
வெட்டிமடி வாரரசர் வேற்றரசர் நாடாகும்
நட்டி வடக்கிலென்றே நாட்டு. 53

### ரௌத்திரி வருட பலன்

மிக்க ரவுத்திரியில் வேளாண்மை யற்பமாம்
மக்களே யான்மடிவர் வான்பொருள்போந்—தொக்க
மனக்கவலை யுற்றுழல்வர் மாதர் வடக்கிற்
கனக்க வறுமைவருங் காண். 54

### துர்மதி வருட பலன்

துன்மதியின் மாரியற்பஞ் சோகமுறுங் கீழ்சாதி
நன்மையில்லை மத்தியநன் னாடுதனில்—உண்மையாக்
கொண்டுதுங்க பத்ரிமுதற் கோதா விரியளவும்
விண்டுபஞ்ச மாகி விடும். 55

### துந்துபி வருட பலன்

துந்துபியின் மிக்கசுப சோபனமுண் டாம்புவியில்
சந்ததமும் வாசமலர்த் தாமரைமேல்—இந்திரையும்
செல்வ மிகக்கொடுப்பாள் செந்நெல்விளை வுண்டாமே
நல்லமழை யுண்டு நவில். 56

### ருதிரோற்காரி வருட பலன்

ஆருத் திரோற்காரி யஃகங் குறையுமே
மாரியற்பஞ் சோரபய மாகுமே—பாரிற்
கடைமாரி பெய்யுங் கனவித்து நன்றாய்த்
தடையறவே யுண்டாகுந் தான். 57

### இரத்தாக்ஷி வருட பலன்

ரத்தாக்ஷி யாண்டதனி னாற்சாதிக் கும்பயமாம்
மெத்தமழை யுண்டு விளைவுண்டு—இத்தரையில்
வேந்தர் பகைத்திடுவார் வெய்யதெற்கு வாரிதியிற்
சார்ந்தபஞ்ச மாய்விடுமே தான். 58

### குரோதன வருட பலன்

குரோதனத்திற் பஞ்சமாங் கூர்ச்சரதே சத்தில்
விரோதத்தால் வேந்தர் மெலிவர்—உரோருகத்து
மானேதென் பூமி மகிழுந் திடமுடனே
தானே விளைவுமுண்டு தான். 59

### அக்ஷய வருட பலன்

மானேகே ளக்ஷயத்தின் மாரியற்ப மானாலுந்
தானே நலமுண்டு தாரணியில்—வானூருங்
கார்பொழியும் வேளாண்மை கானமெங்குந் தோன்றுமே
சீர்பொழிய வோங்குந் திரு. 60